Paper ID: IB02

# இஸ்லாமிய வங்கியும் இளநிலைப்பட்டதாரிகளும்.

**M.H.F. Sahara[1],A.K.F. Rakshana[2]& M.N.N.Aara[3]**

[1, 2 & 3] Student of Islamic Banking and Finance, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

mhfsahara@gmail.com, rakshana786bright@gmail.com and nashathaara95@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்.**

இஸ்லாமிய வங்கித்துறையானது புதிதாக வந்த ஒரு துறையாக காணப்பட்டாலும் இஸ்லாமிய பொருளாதார கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் பல நூற்றாண்டுகளிற்கு முன்னர் உருவாகிவிட்டன. அந்த வகையில் இஸ்லாமிய ஷரிஆ சட்டத்திற்கு அமைவாக நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற இஸ்லாமிய வங்கி முறையானது தற்கால பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்ற ஒன்றாக காணப்பட்ட போதிலும் எதிர்கால சமூகங்களாக உருவாகக் கூடிய இக்கால முஸ்லிம் இளநிலைப்பட்டதாரிகளிடையே இத்தகைய இஸ்லாமிய வங்கிகள் தொடர்பாக விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் காணப்படுகின்ற கலைப் பீடம், வர்த்தக மற்றும் முகாமைத்துவப் பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் ஆகிய பீடங்களில் இருந்து எழுமாறாக தலா 30 மாணவர்கள் வீதம் எடுக்கப்பட்டு மொத்தமாக 90 மாணவர்களைக் கொண்டமைந்த மாதிரியாகும். இவ்வாய்வானது தொகை ரீதியான தரவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளதுடன் வினாக்கொத்து முறையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கு முதலாம்தர மற்றும் இரண்டாம்தர தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் ஊடாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் காணப்படுகின்ற முஸ்லிம் மாணவர்களிடையே இஸ்லாமிய வங்கியியல் தொடர்பான விழிப்புணர்வும், தெளிவும் குறைவாகவே காணப்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இஸ்லாமிய வங்கி முறை பற்றிய விழிப்புணர்வூட்டல்கள் , கருத்தரங்குகள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்வுகள் என்பன மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகவுள்ளது. இதுவே இவ்வாய்வின் முடிவாகப் பெறப்பட்டது.

**திறவுச்சொற்கள்:-** இஸ்லாமிய வங்கி, இளநிலைப் பட்டதாரிகள், இஸ்லாமிய வங்கியின் அவசியம், பாரம்பரிய வங்கிகள், முஸ்லிம் மாணவர்கள்

**அறிமுகம்.**

இஸ்லாம் பூரணத்துவம் மிக்க ஒரு சர்வதேச மார்க்கம் ஆகும். அது பல கொள்கைகளையும் மற்றும் மனித வாழ்வின் எல்லாத்துறைகளைப் பற்றியும் தெளிவாக கூறுகின்றது. அத்துறைகளில் ஒன்றான பொருளாதாரத்துறைப் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளது. அந்த வகையில் பொருளாதாரதரத்துறையுடன் இறுக்கமான தொடர்பை கொண்டவையாக வங்கிகள் காணப்படுகின்றன.

பொருளாதாரமானது மனித வாழ்வோடு உடலும் உயிரும் போல் பிண்ணிப் பினைந்தவையாக காணப்படுகின்றன. இது போல் தான் பொருளாதாரமும் வங்கியும் இணைந்துள்ளதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இன்றைய நவீன பொருளாதார உலகில் வங்கிகள் இல்லை என்றால்

பொருளாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைகின்ற அளவுக்கு வங்கிகளின் செல்வாக்கு காணப்படுகின்றன.

அவ்வாறே இஸ்லாமிய பொருளாதாரம் என்பது தனிப்பட்ட ஒரு நபரிற்கோ அல்லது ஒரு துறை சார்ந்தோருக்கோ நன்மைபயக்கக்கூடியது அல்ல. மாறாக அது இறைவனிடம் இருந்து வந்த நெறியாகவும் சமூக மேன்பாட்டிற்கு துணை நிற்பதாகவும் சமூகத்தில் காணப்படுகின்ற வறுமை, பொருளாதார நெருக்கடி, வேலை இல்லாப் பிரச்சினை, வர்க்க வேறுபாடுகள் என்பவற்றிற்கு தீர்வாகவும் உருவான ஒன்றாகும். இதன் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டவையாகவே இஸ்லாமிய வங்கிகள் அமையப்பெற்றுள்ளன.

இஸ்லாமிய வங்கிமுறை என்பது கொடுக்கல் வாங்களின் போது அல்லாஹ்வும் அவனது தூதரும் எச்சரித்த வட்டியில் இருந்து தவிர்த்துக் கொள்ளக்கூடிய நாடு தழுவிய ஒரு நிதிக் கொள்கையாகும்.( BRAIN KETTEL, (2010) Frequently asked questions in Islamic Finance) மேலும் Dr.அஹ்மட் நஜ்ஜாரின் கூற்றுக்கமைய இஸ்லாமிய பொருளாதார வழியில் செல்வத்தைப் பயன்படுத்துவதற்கும் வளப்பங்கீட்டை சீர்படுத்துவதற்கும் நீதியையும் சமூகப் பொறுப்பையும் நிறைவேற்றுவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் செல்வங்களை ஒன்று திரட்டி தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற நிதி சார் நடவடிக்கைகளை இஸ்லாமிய வரையறைக்குள் மேற்கொள்கின்ற நிறுவனமே இஸ்லாமிய வங்கியாகும். (இஸ்லாமிய வங்கி முறை ஓர் அறிமுகம், (2012)பக்:03) ஆனால் பாரம்பரிய வங்கி என்பது வட்டியை அடிப்படையாக கொண்டு இயங்குகின்ற ஒன்றாகும்.

அந்த வகையில் இஸ்லாமிய வங்கிகள், இஸ்லாமிய ஷரீஆ அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட இலாபம், நட்டம் ஆகிய இரண்டினையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய உன்னத தன்மை வாய்ந்ததாகும். இதனாலேயே இஸ்லாமிய வங்கிகள் PLS ( Profit and Lost sharing ) என அழைக்கப்படுகின்றன. (மஸாஹிர், எஸ்.எம்.எம்.,அஹ்மத் ஹில்மி,எச்.ஏம்.(2012 December),இஸ்லாமிய வங்கி முறை ஓர் அறிமுகம்) இஸ்லாமிய வங்கிகள் வட்டியில் இருந்து விடுபடுதல், நிச்சயமற்ற தன்மையிலிருந்து தவிர்த்துக்கொள்ளல், சூதாட்டத்தை நிராகரித்தல், ஹராம் ஹலால் பற்றி கவனத்தில் கொள்ளல், ஸகாத் மற்றும் இஸ்லாமிய வரியை பேணி நடைமுறைப்படுத்தல் போன்ற அடிப்படைத் தத்துவங்களை நோக்காக கொண்டு பின்பற்றி செயற்படுகின்றன.

தற்காலத்தில் இஸ்லாமிய வங்கிகளானது முஸ்லிம் நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் வரவேற்கப்படுகின்ற துறையாகவும் துரித வளர்ச்சியடைந்து வரும் துறையாகவும் மக்களின் வரவேற்பைப் பெற்ற ஒன்றாகவும் இஸ்லாமிய வங்கிகள் காணப்படுகின்றன என (அப்துல் லெதீப்,ஏ.ஏ,மின்வர்,எம்.எச்,(2014))ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அவ்வாறே இஸ்லாமிய வங்கிகளினால் முழாரபா, முஷாரகா, முராபஹா, இஜாரா, ஸலம், வகாலா போன்ற பல கொடுக்கல் வாங்கல்களையும் சேவைகளையும் வழங்குகின்றன.

இலங்கையிலும் இஸ்லாமிய வங்கிகள் மிக துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் துறையாக மாறியுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இஸ்லாமிய வங்கிகளின் புதிய கிளைகள், மக்களின் முதலீடுகள் அதிகரித்துள்ளமை மற்றும் ATM நிலையங்கள் என்பன புதிதாக நிறுவப்பட்டுள்ளன. ( Amana வங்கியின் ஆண்டறிக்கை(2016))

இவ்வாறான இஸ்லாமிய வங்கிகளின் வளர்ச்சியானது அதிகரித்து வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் கற்கின்ற முஸ்லிம் மாணவர்களிடையே இஸ்லாமிய

வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினையும் அறிவு மட்டத்தினையும் கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

**ஆய்வு பிரச்சினை**

எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகமானது அதிகமான முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடையே கொண்டு காணப்பட்ட போதிலும், அங்குள்ள முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடையே இஸ்லாமிய வங்கி பற்றிய தெளிவும் அது பற்றிய விழிப்புணர்வும் முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடையே குறைவாக உள்ளதே இவ்வாய்வு பிரச்சனையாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

- இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் உள்ள முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளுக்கும் இஸ்லாமிய வங்கி மற்றும் பாரம்பரிய வங்கிகளிற்கும் இடையிலான தொடர்பை கண்டறிதல்.
- இங்கு உள்ள முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடையே இஸ்லாமிய வங்கிகள் பற்றிய தெளிவினை கண்டறிதல்.
- மற்றும் அவர்களிடையே இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினை மதிப்பிடல்.
- முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடையே இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினை அதிகரிப்பதற்கும் தெளிவினை ஏற்படுத்துவதற்குமான ஆலோசனைகளை வழங்குதல்.

**ஆய்வு முறைமை**

இவ்வாய்வானது தொகை ரீதியான தகவல்களை உள்ளடக்கி அமையப் பெற்றுள்ளது. ஏனெனில் இவ்வாய்வானது முஸ்லிம் மாணவர்களிடையே இஸ்லாமிய வங்கியியல் பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினை அறிதல், இஸ்லாமிய வங்கிக்கும் மாணவர்களுக்குமிடையிலான தொடர்பு மட்டத்தினை அறிதல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக அமைவதனால் வினாக்கொத்து முறையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இதனால் இவ்வாய்வுக்கு திரட்டப்பட்ட தரவுகள் தொகை ரீதியாக அமைந்துள்ளன.

இவ்வாய்வை மேற்கொள்வதறக்காக முதல் நிலைத் தரவுகளும், துணை நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. முதல் நிலைத் தரவுகள் என்பது ஆய்வுக் களத்திற்கு நேரடியாகச் சென்று உற்று நோக்கல், நேர்காணல், வினாத் தொகுப்பு போன்ற கருவிகளைக் கொண்டு திரட்டப்படும் தரவுகளாகும். இவை பிறரால் சிதைக்கப் படாமலும், புனையப் படாமலும் ஆய்வாளரினால் ஆய்வின் நோக்கதத்த அடையும் பொருட்டு சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்விற்காக தரவுகள் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள 2014.∴2015ம் கல்வியாண்டில் உள்ள முஸ்லிம் இளநிலை பட்டதாரிகளிடமிருந்து சேகரிப்பதற்காக வினாக்கொத்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வினாக்கொத்து முறையானது ஆய்வின் நோக்கத்தை அல்லது இலக்கை அடையும் பொருட்டு கட்டமைக்கப்பட்டு தொகுத்து விநியோகிக்கப்பட்டது.

இவ்வாய்வினை மேற்கொள்வதறக்காக ஆய்வாளர்களினால் சுயமாகக் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தே இவ்வாய்வின் குடித்தொகை மாதிரியாகும். இலங்கை தென்கிழக்குப்

பல்கலைக்கழகத்தில் காணப்படும் பீடங்களுள் மூன்று பீடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு பீடத்திலுமிருந்து எழுமாறாக 30 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 90 மாணவர்களைக் கொண்ட மாதிரியாகும். இங்கு முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வை மதிப்பிடுவதற்காக வினாக்கொத்துக்கள் விநியோகிகிப்பட்டு திரட்டப்பட்ட தகவல்கள் முதல் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2014/2015ம் கல்வியாண்டில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற முஸ்லிம் மாணவர்களுக்கு மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது என்ற தலைப்பில் இவ்வாய்விற்காக தகவல்களை சேகரிக்கும் நோக்கில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தானது 2 பகுதிகளைக் கொண்டமைந்துள்ளன. இப்பிரிவுகளில் 1ம் பகுதி – மாணவர் விபரம் தொடர்பாகவும், இஸ்லாமிய வங்கிக்கும் இடையிலான தொடர்பை அறியும் நோக்கில் 10 வினாக்களை உள்ளடக்கி அமைந்துள்ளது. 2ம் பகுதி – வங்கி தொடர்பான அறிவினை மையப்படுத்தியதாக 15 வினாக்களையும் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. தரவுகளைப் பகுப்பாய்வு செய்து விளக்குவதற்கு EXCEL 2010 , பை வரைபு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

துணை நிலைத் தரவுகள்/ இரண்டாம் நிலைத் தரவுகள் என்பது ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப ஏனையோரால் இதற்கு முன்னர் சேகரிக்கப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பவற்றைக் குறிக்கும். இவ்வாய்வினை சிறந்த முறையில் ஆக்கபூர்வமாக வடிவமைப்பதற்கு துணை நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன

- நூல்கள்
- இஸ்லாமிய வங்கிகளின் வெளியீடுகள்
- ஆய்வுக் கட்டுரைகள்
- இதழ்கள்
- இணையதள வெளியீடுகள்
- அமானா வங்கி ஆண்டறிக்கை

என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவீட்டு முறையில் தரவுப்பகுப்பாய்வு நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்.**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் உள்ள 03 பீடங்களில் இருந்து எழுமாறாக ஒரு பீடத்திற்கு 30 முஸ்லிம் மாணவர்கள் வீதம் மொத்தமாக 90 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

01. இஸ்லாமிய வங்கியிலும் பாரம்பரிய வங்கியிலும் வங்கிக்கணக்கைப் பேணுவோரை நோக்குககின்ற போது பின்வரும் தரவுகள் கிடைக்கப் பெற்றன.

அட்டவணை 1 - இஸ்லாமிய வங்கியிலும் பாரம்பரிய வங்கியிலும் வங்கிகணக்கைப் பேணுவோர் (பீடம் ரீதியாக)


| பீடம் | பாரம்பரிய வங்கி மற்றும் இஸ்லாமிய வங்கி | இஸ்லாமிய வங்கி | பாரம்பரிய வங்கி |
|---|---|---|---|
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | 13.3% | - | 100% |
| வர்தக மற்றும் முகாமைத்துவப் பீடம் | 10% | 20% | 70% |
| கலைப் பீடம் | 6.6% | 10% | 83% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

அட்டவணை 2 - இஸ்லாமிய வங்கியிலும் பாரம்பரிய வங்கியிலும் வங்கிக்கணக்கைப் பேணுவோர்

| வங்கி கணக்கு முறை | மொத்த மாணவர்கள் (வீதம்) |
|---|---|
| பாரம்பரிய வங்கி மற்றும் இஸ்லாமிய வங்கி | 10% |
| இஸ்லாமிய வங்கி | 10% |
| பாரம்பரிய வங்கி | 80% |

வரைபு : 01 : வங்கிக்கணக்கு முறை




மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

இத்தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களுள் அதிகமானோர் பாரம்பரிய வங்கிகளிலேயே கணக்குகளைப் பேணிவருகின்றனர் எனத் தெளிவாகின்றது. இந்நிலைமைக்கான காரணங்களாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

- மஹாபொல, பேசரி போன்ற புலமைப் பரிசில்கள் பாரம்பரிய வங்கிகளின் ஊடாகவே வழங்கப்படுகின்றமை.

- பல்கலைகழவளாகத்தினுள் பாரம்பரிய வங்கிகளின் ATM சேவையே பல காலமாக இயங்குகின்றமையும் அண்மைக் காலமாகவே Amana வங்கியின் ATM சேவை இங்கு அமுல்படுத்தப்பட்டமை.
- மடிக்கனணிக்கான கடனுதவி பல்கலைக்கழக மாணவர்களிற்கு பாரம்பரிய வங்கிகளின் ஊடாக கிடைக்கப் பெறுகின்றமை.
- அரசின் தலைமையில் பாரம்பரிய வங்கிகள் இயங்குவதனால் நம்பகத் தன்மை அதிகமாக காணப்படுகின்றமை.
- நாட்டுப்புர பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளின் செல்வாக்கு குறைவாகக் காணப்படுகின்றமை.

இவ்வாறு பாரம்மரிய வங்கிகளில் அதிகமான மாணவர்கள் வங்கி கணக்கு பேணுகின்ற நிலையானது முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளதனையே சுட்டிகாட்டுகின்றது.

02. இஸ்லாமிய வங்கியிலும் பாரம்பரிய வங்கியிலும் மாணவர்கள் காணும் திருப்தித் தன்மையை நோக்குககின்ற போது பின்வருமாறு காணப்படுகின்றன.

அட்டவணை 3- வங்கிகளிற்கிடையிலான திருப்தி தன்மை.

| **பீடம்** | **பாரம்பரிய வங்கி** | | **இஸ்லாமிய வங்கி** | |
|---|---|---|---|---|
| | திருப்தி | அதிருப்தி | திருப்தி | அதிருப்தி |
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | 80% | 20% | 73.3% | 26.6% |
| வர்தக மற்றும் முகாமைத்துவப் பீடம் | 79.16% | 20.8% | 100% | - |
| கலைப் பீடம் | 13.3% | 86.7% | 100% | - |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

திருப்திநிலையை பொருத்த வரையில் இஸ்லாமிய வங்கியின் சேவையை குறைவான தொகையினர் பெற்றாலும் அவற்றில் கூடியளவு திருப்தியைக் காணுகின்றனர் ஏனெனில் இஸ்லாமிய வங்கியினைப்பற்றி அறிந்திருத்தல், இஸ்லாமிய ஷரீஆ சட்டத்திற்குட்பட்டிருத்தல், வட்டியில் இருந்து நீங்கியிருத்தல், சமூக நலனை கருத்தில் கொண்டு செயற்படல் போன்றள திருப்தி தன்மைமைக்கு காரணமாகும். அதிருப்திக்கு காரணமாக குறைந்தளவான வங்கிக் கிளைகள் காணப்படல், குறைந்தளவான ATM நிலையங்கள் என்பனவும் உள்ளன. பாரம்பரிய வங்கிகளின் திருப்தி, அதிருப்தி நிலையில் அதிகமானோர் திருப்தியை கொண்டமைக்கு காரணம் ATM நிலையங்கள் நாடு பூராகவும் பரவலாக காணப்படல், கடன் வசதிகள், sms சேவைகள், TeleBanking, கடன் அட்டைகள் போன்றனவும், குறைந்தளவானோர் அதிருப்தியையும் கொண்டு காணப்படுவதும் ஆகும் என இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

03.இஸ்லாமிய வங்கிகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்ட விதங்களினை நோக்குககின்ற போது பின்வருமாறு காணப்படுகின்றன.

அட்டவணை 4 - இஸ்லாமிய வங்கிகள் பற்றி முஸ்லிம் இளநிலை பட்டதாரிகள் அறிந்து கொண்ட விதம் (பீடங்கள்)

| பீடம் | நண்பர்களின் மூலம் அறிந்தோர். | ஊடகங்கள் மூலம் அறிந்தோர். | விளம்பரங்கள் மூலம் அறிந்தோர். | ஏனையவைகளின் மூலம் அறிந்தோர். |
|---|---|---|---|---|
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | 10% | 23.3% | 43.3% | 23.3% |
| வர்தக மற்றும் முகாமைத்துவப் பீடம் | 16.6% | 36.6% | 30% | 16.6% |
| கலைப் பீடம் | 26.6% | 33.3% | 20.3% | 20% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

அட்டவணை 5 - இஸ்லாமிய வங்கிகள் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்ட விதம்

| அறிந்து கொண்ட விதம் | மொத்த மாணவர்கள் (வீதம்) |
|---|---|
| நண்பர்கள். | 17.7% |
| ஊடகங்கள். | 31.1% |
| விளம்பரங்கள். | 35.% |
| ஏனையவைகள். | 20% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

இத்தரவுகளின் அடிப்பிடயில் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றி தெரியப்படுத்துவதில் விளம்பரங்களே அதிக செல்வாக்கு செலுத்துகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இஸ்லாமிய வங்கியால் கவர்ச்சிகரமான விளம்பரங்களை உருவாக்க வேண்டும். அவற்றிற்கு புதிய தொழில் நுட்பங்களை கைகொள்ள வேண்டும். மேலும் ஊடகங்களிளும் இஸ்லாமிய வங்கிகள் பற்றி மக்கள் மத்தியில் அறியப்படுத்த வேண்டும்.

04. தத்தமது பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளின் பயன்பாடு பற்றி மாணவர்களிடம் வினவப்பட்ட போது பின்வருமாறு தரவுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 29% தம் பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்து அதனைப் பயன்படுத்துபவர்களாகவும் 31% இஸ்லாமிய வங்கிகள் இருந்தும் அதனைப் பயன்படுத்தாதவர்களாகவும் மற்றும் 40% ஆனவர்கள் இஸ்லாமிய வங்கிகளை கொண்டிராமலும் அவற்றின் பயன்பாடுகளைப் பற்றியும் அறியாதவர்களாகவும் உள்ளனர் எனவும் இவ்வாய்வின் ஊடாக அறிந்து கொள்ள முடிந்தது. இங்கு அதிகமான பிதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்தும் அவற்றினை பயன்படுத்தாதோர் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதும், பல பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கி கிளைகள் இல்லாமல் இருப்பதன் ஊடாகவும் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளதனையே காட்டுகின்றது.

அட்டவணை 6 - தத்தமது பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளின் பயன்பாடு (பீடம் ரீதியாக)


| **பீடம்** | **பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்து பயன்படுத்துவோர்** | **பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்தும் பயன்படுத்தாதோர்** | **பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளுமில்லை பயன்பாடுமில்லை** |
|---|---|---|---|
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | 26.6% | 53.33% | 20% |
| வர்தக மற்றும் முகாமைத்துவப் பீடம் | 46.6% | 40% | 13.3% |
| கலைப் பீடம் | 13.3% | 33.3% | 53.3% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

அட்டவணை 7 - தத்தமது பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளின் பயன்பாடு

| **இஸ்லாமிய வங்கிகளின் பயன்பாடு** | **மொத்த மாணவர்கள் (வீதம்)** |
|---|---|
| பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்து பயன்படுத்துவோர் | 28.8% |
| பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகள் இருந்தும் பயன்படுத்தாதோர் | 31.1% |
| பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளுமில்லை பயன்பாடுமில்லை | 40% |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017




வரைபு: 02 : தத்தமது பிரதேசங்களில் இஸ்லாமிய வங்கிகளின் பயன்பாடு


05. முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றிய தெளிவினை நோக்கின், இஸ்லாமிய வங்கி பற்றி வினாக்கொத்தில் விடுக்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு குறித்த மாணவர்கள் விடையளித்திருந்த விதத்தை அடிப்படை காரணமாக கொண்டு இத்தரவு பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நோக்குகின்ற போது இம்மாணவர்களுள் 70% ஆனவர்கள் இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவும் தெளிவும் மிக குறைந்தவர்கள் என்பதும், 30% ஆனவர்கள் தெளிவினையுடையவர்களாக காணப்படுகின்றனர். இத்தகைய நிலைக்கு அடிப்படையாக இஸ்லாமிய வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக காணப்படுகின்றமையே ஆகும்.

அட்டவணை 8 - முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றிய தெளிவு

| பீடம் | தெளிவு | தெளிவின்மை |
|---|---|---|
| இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடம் | 33.3% | 66.6% |
| வர்தக மற்றும் முகாமைத்துவப் பீடம் | 26.6% | 73.3% |
| கலைப் பீடம் | 30% | 70% |
| **மொத்தம் மாணவர்கள் (வீதம்)** | **30%** | **70%** |

மூலம் : வினாக்கொத்து அளவை ஆய்வு 2017

வரைபு : 03: முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கிகள் பற்றிய தெளிவு




**முடிவுரை**

இஸ்லாமிய வங்கியானது வளர்ச்சிடைந்து வரும் இக்கால கட்டத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் அதுபற்றிய அறிவு காணப்பட வேண்டிய நிலையில் அதிகமான முஸ்லிம் மாணவர்களை உள்ளடக்கிய இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2014/2015 கல்வியாண்டில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவு காணப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான விடயமாகும். எனினும் அது பற்றிய அறிவும் இஸ்லாமிய வங்கியுடனான தொடர்பும் குறைவாகவே காணப்படுகின்றது. இஸ்லாமிய வங்கியியல் துறை பற்றிய கற்கையை உள்ளடக்கி காணப்படுகின்ற இப்பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய அறிவு தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாய்வினை மேற்கொண்டதன் ஊடாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2014/2015 கல்வியாண்டு முஸ்லிம் மாணவர்களிடையே இஸ்லாமிய வங்கியுடனான தொடர்பும் அது பற்றிய விழிப்புணர்வும் குறைவாகவே உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பின்வரும் தீர்வுகள் முன்வைக்கப் படுகின்றன.

இஸ்லாமிய வங்கிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய நிகழ்வுகள் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துப் பீட முஸ்லிம் மாணவர்களை உள்ளடக்கி அவை மேற்கொள்ளப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களை ஈர்க்கக் கூடிய வகையிலும், தெளிவூட்டும் வகையிலும் இஸ்லாமிய வங்கியியல் துறையை சிறப்புத் துறையாக தெரிவு செய்த மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

முஸ்லிம் மாணவர்களை அதிகமாகக் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய வங்கி ATM ஒன்று உருவாக்கப்பட்டதைப் போல் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய வங்கியொன்றும் உருவாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இஸ்லாமிய வங்கியியல் என்பது ஒரு கற்கை நெறியாகவே காணப்படுகின்றது. அதனை ஒரு திணைக்களமாக செயற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இதன்மூலம் இஸ்லாமிய வங்கியியலை கற்பதற்கு அதிகமான மாணவர்களை உள்வாங்கலாம்.

**உசாத்துணைகள்**


1) மஸாஹிர்,எஸ்.எம்.எம்,அஹ்மத் ஹில்மி,எச்.ஏம்.(2012 December), இஸ்லாமிய வங்கி முறை ஓர் அறிமுகம்,*கொழும்பு:மீள்பார்வை மீடியா சென்டர்*,பப.03,08,12
2) அப்துல் லெதீப்,ஏ.ஏ,மின்வர்,எம்.எச்,(2014*),இஸ்லாமிய வங்கியின் தேவைப்பாடும் வளர்ச்சியும்*,[ online ]: Avaiable :seu.ac.lk, (accsess ) 18.05.2017
3) BRAIN KETTEL, (2010) Frequently asked questions in Islamic Finance, A John wilyey & Sons Ltd, pp.34
4) MERRVYN K.LEWIES,MOHAMED ARIFF AND SHAMSHER MOHAMED (2014),Risk and regulation of Islamic Banking, *Edward Elgar publishing Ltd*,pp.43
5) MARIKKAR, A. I. (2009/2010). Islamic Banking. Al-Islah. South Eastern University of Sri Lanka.
6) றஸ்மி மூசா சலபி ( 03.10.2013 ) *,இஸ்லாமிய பொருளாதாரத்தில் நவீன வங்கி முறையின் சாரம்.*,[ online ] : Avaiable : http://content://com.Sec.androidapp., (accsess ) 12.05.2017
7) அஷ்ஷெய்க் யூஸுப் முப்தி, , (2012),(மீள்பார்வை), *இலங்கையில் இஸ்லாமிய வங்கி துறை எதிர் நோக்கும் சவால்கள்.*,[ online ] : Available : http:/ / content:// com. Sec. android app. Sbrowser/ redinglist/10106203232.mhtml. , (accsess ) 13.05.2017
8) இபுராஹிம் அன்சார். , ( 22.04.2015 ),*இலங்கையின் இஸ்லாமிய வங்கி முறை*!! , [ online ] : Available : www.Srilanka muslims.lk . , (accsess ) 13.05.2017
9) மாஜித்,ஐ வ. எல். ஏம். ( 17.05.2017 ), *வட்டி இல்லா வங்கி இஸ்லாத்திற்கு ஏற்புடையதா?* -1,[ online ] : Available : http:/ /content:// com.Sec.android app.Sbrowser/ redinglist/0106202250.mhtml. , (accsess ) 03.06.2017